பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

14 12 2024 7 15

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு அரசியலமைப்புச் சட்டம் முக்கிய தூணாக திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
2. விவசாயிகள் பயிர்க்கழிவுகளை எரிப்பதை தடுக்க முறையான தீர்வு காணப்பட வேண்டுமென்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் வலியுறுத்தியுள்ளார்.
3. நாட்டில் விண்வெளித்துறையின் செயல்பாடுகள் சர்வதேச தரத்திற்கு இணையாக உள்ளது என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளர்.
4. தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நாளை காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. சோலாப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீவள்ளி ரஷ்மிகா இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு அரசியலமைப்புச் சட்டம் முக்கிய தூணாக திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

மக்களவையில் அரசியல் சாசனம் தொடர்பாக நேற்றும் இன்றும் நடைபெற்ற சிறப்பு விவாதத்திற்கு பிரதமர் இன்று பதிலளித்து பேசினார்

வேற்றுமையில் ஒற்றுமை என்பது நாட்டின் தலைசிறந்த அம்சமாக உள்ளது என்று தெரிவித்தார்.

நாட்டின் ஒருமைப்பாட்டை வலுப்படுத்தும் வகையில் அரசின் கொள்கைகள் மற்றும் முடிவுகளை அரசு மேற்கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

ஜம்மு-கஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ் வழங்கும் சட்டப்பிரிவு 370 நீக்கம், ஜி எஸ் டி அமலாக்கம் போன்ற பல்வேறு முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

வரும் ஆண்டுகளில் உலக அளவில் இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மகளிர் தலைமையிலான வளர்ச்சிப் பணிகளில் மத்திய அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக அவர் கூறினார்.

முன்னதாக இந்த விவாதத்தில் பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, நம்பிக்கை, முயற்சி என்ற தாரக மந்திரத்துடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

நாடு சுதந்திரம் பெற்ற பின் அனைவருக்கும் சம உரிமை கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நாட்டில் சிறுபான்மையினர் சட்டப்பூர்வமான பாதுகாப்பை பெற்றுள்ளதாக தெரிவித்த அவர், சிறுபான்மையினர் நலனுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களையும் திரு கிரண் ரிஜிஜூ எடுத்துரைத்தார்.

இந்த விவாதத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, நாட்டில் வேலைவாய்ப்பின்மை, பெண்கள் மற்றும் விவசாயிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

நாட்டின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார சமத்துவம் குறைந்து வருவதாக திரு ராகுல்காந்தி கூறினார்.

இந்த இரண்டு நாள் விவாதத்தில் பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்களும் பங்கேற்று தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

**[]<<<>>>[]**

மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் மாநாடு, இரண்டாவது நாளாக இன்றும் புதுதில்லியில் நடைபெற்றது.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை உரையாற்றுகிறார்.

இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டின் விவாதத்தின்போது மாநிலங்களின் ஒத்துழைப்புடன் வளர்ச்சித் திட்டப்பணிகளை அமல்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மத்திய மாநில அரசுகளுக்கு இடையே நல்லுறவை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறிததும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

**[]<<<>>>[]**

விவசாயிகள் பயிர்க்கழிவுகளை எரிப்பதை தடுக்க முறையான தீர்வு காணப்பட வேண்டுமென்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் வலியுறுத்தியுள்ளார்.,

புதுதில்லியில் இன்று நடைபெற்ற தேசிய எரிசக்தி பாதுகாப்பு விருதுகளை வழங்கி அவர் உரையாற்றினார்.

தலைநகர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புக்கு உடனடி தீர்வுகாண வேண்டியது அவசியம் என்று அவர் கூறினார்.

எரிசக்தி மற்றும் இயற்கை ஆதாரங்கங்களை பயன்படுத்துவதில் மக்கள் கவனமுடன் இருக்க வேண்டுமென்று திரு ஜக்தீப் தன்கர் கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

நாட்டில் விண்வெளித்துறையின் செயல்பாடுகள் சர்வதேச தரத்திற்கு இணையாக உள்ளது என்று மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தனியார் தொலைக்காட்சி ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், கடந்த பத்து ஆண்டுகளில் நாட்டின் விண்வெளி பொருளாதாரம் மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாகக் கூறினார்.

விண்வெளித்துறையில் உலக அளவில் இந்தியா ஒன்பது சதவீத பங்களிப்பை கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

விண்வெளித்துறையில் உள்ள வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்ள தனியார் நிறுவனங்கள் முன்வர வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார். வரும் 2035 ஆண்டுக்குள் விண்வெளியில் இந்தியா சொந்தமாக ஆய்வு நிலையத்தை அமைக்கும் என்று திரு ஜிதேந்திரசிங் நம்பிக்கை தெரிவித்தார்.

[]<<<>>>[]

மறைந்த பழம்பெரும் இந்தி திரைப்பட நடிகர் ராஜ்கபூரின் 100-வது பிறந்த தினத்தையொட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில், ராஜ்கபூர் திரைப்பட தயாரிப்பாளர் மட்டுமன்றி கலாச்சார தூதுவராகவும் இருந்ததாக புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்திய சினிமாவை சர்வதேச அளவில் எடுத்துச் சென்றதற்கு அவர் ஒரு காரணியாக திகழ்ந்தார் என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

கலைநயம், சமூக மாற்றத்திற்கான சிந்தனைகள், சாமானிய மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை பிரதிபலிப்பதாகவும் அவரது திரைப்படங்கள் இருந்ததாக பிரதமர் கூறியுள்ளார்.

திரைப்படத்துறைக்கு ராஜ்கபூர் ஆற்றிய அளப்பரிய பங்களிப்பு உலகம் முழுவதும் உள்ள அவரது ரசிகர்களால் என்றென்றும் நினைவு கூரப்படுவார் என்றும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

தமிழரின் பண்பாட்டை நினைவு கூரும் வகையில் பொருணை, வைகை இலக்கிய திருவிழாக்கள் நடத்தப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் நடைபெற்று வரும் கரிசல் இலக்கிய திருவிழாவில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர், இலக்கிய செழுமையும், இலக்கிய வளமையும் கொண்டதாக தமிழ்மொழி திகழ்கிறது என்று கூறினார்.

தமிழர்கள் இரண்டாயிம் ஆண்டுகளுக்கு முன்பே எழுத்தறிவு பெற்றவர்களாக இருந்தனர் என்பது அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக கரிசல் இலக்கிய கண்கடசியை திரு தங்கம் தென்னரசு தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

மின்னணு வர்த்தகத்தில் நுகர்வோரின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தேசிய நுகர்வோர் தினம் இம்மாதம் 24-ஆம் தேதி கொண்டாடப்படுவதையொட்டி, நுகாவோர் பாதுகாப்புக்கான உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்படும் என நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நுகர்வோரின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கும் விதமாக சம்பந்தப்பட்ட துறை சார்ந்த பிரதிநிதிகளுடன் ஆலோசித்து அதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்படும் என்று அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நாளை காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாகவம் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே தென்மாவட்டங்களில் பெய்து வரும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு பணியில் ஈடுபட்டு வரும் தமிழ்நாடு பேரிடர் மீட்புக் குழுவினரை மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் சந்தித்து மீட்புப் பணிகள் குறித்து கேட்டறிந்தார்.

வெள்ள நீரால் சூழப்பட்ட பகுதிகளையும் அவர் பார்வையிட்டார்.

தேனி மாவட்டத்தில் பெய்து வரும் மழை காரணமாக ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதை அடுத்து கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் மலைப்பகுதியையொட்டி சாலைளில் மக்கள் இரவு நேர பயணத்தை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

சோலாப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீவள்ளி ரஷ்மிகா இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர் 6-3, 6-1 என்ற செட் கணக்கில் சகவீராங்கனை சஹஜா யமளப்பல்லியை வென்றார்.

**[]<<<>>>[]**

இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் மழையினால் பாதிக்கப்பட்டது.

***End of News***